**நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் செயல்முறைகள் முன்னிலை:திரு.கா. பிச்சை மைய்தீன் M.Sc.,**

**ந.க.1605/ஊ.வ.2/2021** **நாள்: 28.10.2021.**

பொருள்: பணியமைப்பு - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் அலகு - நாகப்பட்டினம் மாவட்டம் - மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை – சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-III - மாணிக்கம் (திரு).ம என்பவருக்கு சுருக்கெழுத்து தட்டச்சர் பணி நிலையில் தகுதிகாண்பருவம் நிறைவு செய்து ஆணையிடல்.

பார்வை:
1. அரசாணை எண் 349, பணி மற்றும் நிர்வாக சீர்த்திருத்த துறை, நாள்: 12.04.1984.
2. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 கடிதம் ந.க.எண். 6061/PSD-B/2017 நாள் : 23.09.2017.
3. மாவட்ட ஆட்சித்தலைவர், திருவள்ளூர் செயல்முறைகள் ந.க.எண்:898/2015/பஅ2 நாள்:04.11.2017 மற்றும் 07.09.2018.
4. தொடர்புடைய ஆவணங்கள்.

******

**ஆணை:-**

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-III பதவிக்கு தேர்ச்சி பெற்று பார்வை 3-ல் காணும் செயல்முறைகளின்படி பணிநியமன ஆணை வழுங்கப்பட்டு திருவள்ளுர் ஊரக வளர்ச்சி அலகில் சுருக்கெழுத்து தட்டச்சராக 15.11.2017 முற்பகல் பணியேற்பு செய்து ஒருவழி மாவட்ட மாறுதலில் நாகப்பட்டினம் ஊரக வளர்ச்சி அலகில் 06.11.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வரும் திரு.ம.மாணிக்கம் என்பவருக்கு பார்வை 3-ல் காணும் 07.09.2018 தேதிய செயல்முறைகளின்படி சுருக்கெழுத்து தட்டச்சராக பணியேற்ற நாளான 15.11.2017 முற்பகல் தேதிமுதல் வரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

பார்வை1-இல் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி 3ஆண்டுகளுக்குள் இரண்டாண்டுகள் என்ற தகுதிகாண் பருவகாலத்தில் “Computer Office Automation” தேர்வு தேர்ச்சி பெற்றுள்ளார். துறைத்தேர்வில் அலுவலக நடைமுறை தேர்வினை 21.02.2021 பிற்பகல் தேதியில் தேர்ச்சி பெற்றுள்ளார்.

எனவே, கீழ்காணும் விபரப்படி சுருக்கெழுத்து தட்டச்சர் நிலையில் துறைத்தேர்வில் அலுவலக நடைமுறை தேர்வு தேர்ச்சி பெற்ற நாளான 21.02.2021 பிற்பகல் தேதியில் தகுதிகாண் பருவகாலத்தினை திருப்திகரமாக நிறைவு செய்துள்ளதாக விளம்பி இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

தொடர்ச்சி..

| வ. எண். | பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் (திருவாளர்) | பணியேற்பு செய்த நாள் | பணிவரன் முறை செய்யப்பட்ட நாள் | தகுதிகாண் பருவம் நிறைவு செய்யும் நாள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | ம.மாணிக்கம், சுருக்கெழுத்து தட்டச்சர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகப்பட்டினம். | 15.11.2017 முற்பகல் | 15.11.2017 முற்பகல் | 21.02.2021 பிற்பகல் |

இத்தகுதிகாண் பருவம் பார்வை 2-இல் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளர் கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட நீதிமன்ற பேரணைக்கு உட்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

28.10.2021

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர்(வளர்ச்சி),
நாகப்பட்டினம்.

28/10/2021

பெறுநர்:

திரு.ம.மாணிக்கம்,
சுருக்கெழுத்து தட்டச்சர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
நாகப்பட்டினம் – உரிய வழியாக.

நகல்: ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை-15.
நகல்: திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகப்பட்டினம் - ப/ச.
நகல் : ஊ.வ.5 பிரிவிற்கு.
நகல் : ஊ.வ.2 இருப்புக்கோப்பிற்கு.